ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2030/10 - 2017 ජූලි මස 31 වැනි සඳුදා - 2017.07.31

*2030/10 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அட்டவணையின் III ஆம் நிரலின் நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதும் 2017.05.08 ஆந் திகதிய 2018/2 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான மீன் (எச். எஸ். குறியீட்டு இல. 0303.89.90) சம்பந்தமான உத்தரவு 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, யூலை 31.*

1A - PG 3637 — 532 (2017/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு | காலப்பகுதி |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | | |
| 01 | 03.03 | | மீன் குளிரால் உறையச் செய்யப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழான முள்ளற்ற துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலாக | | |
| | | 0303.89.90 | பிற - தலபத்து மீன் (Sail fish - lstiophorus Platypterus) மற்றும் மார்லின் மீன் (Marlin fish - Makaira spp) மட்டும் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 | நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து மூன்று (03) மாதங்கள் வரை |
| 02. | 10.05 | 1005.90 | பிற - மக்காச் சோளம் | கி. கிராம் ஒன்றுக்கு 10.00 ரூபா | நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து ஆறு (06) மாதங்கள் வரை |

08-594

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.